பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 29 சனிக்கிழமை 17.12.2022 கதிர் 293

தொடர்ந்து மூன்று நாட்களுக்கு

## மின்சாரத் தடையை நீடிப்பதற்கு அனுமதி

நாட்டில் இன்று (17) முதல் எதிர்வரும் 19ஆம் திகதி வரையான காலப்பகுதியில், மின்சாரத்தைத் துண்டிப்பது தொடர்பில், மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு இலங்கைபொதுப்பயன்பாடுகள்ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. 2



## கொழும்பை உலுக்கிய படுகொலை: அரசியல்வாதிகளிடமும் வாக்குமூலம்

பொரளை மயானத்தில் பணிபுரியும் ஊழியர்களிடமும் துருவல்

பிரபல தமிழ் வர்த்தகர் தினேஷ் ஷாப்டர், கொழும்பில் பட்டப்பகலில் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் அரசியல்வாதிகள் உள்ளிட்ட 15 பேரிடம் இதுவரை வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டுள்ளது.

இந்தத் தகவலைப் பொலிஸ் ஊடகப் பிரிவு உறுதிப்படுத்தி யுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை பொரளை பொது மயானத்துக்கு அருகில் கைகளும், கால்களும் கட்டப்பட்டு, கழுத்தில் பலத்த காயங் களுடன், காரில் இருந்த நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் தினேஷ் ஷாப்டர் உயிரிழந்தார்.

இந்தநிலையில், பொரளை மயானத்தில் பணிபுரியும் ஊழியர்கள் சிலரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது 8

## படுகொலையாளிகளுக்கு எதிராக உடன் கடும் நடவடிக்கை எடுக்கவும்



### தினேஷ் ஷாப்டரின் மரணத்தையடுத்து பொலிஸ் அதிகாரிகளுக்குப் பணிப்புரை

படுகொலைகள் மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். 2

## தீயில் எரிந்து குழந்தை சாவு

வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் மூன்றரை மாதக் குழந்தை ஒன்று எரிந்து உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அங்கொட, அம்பத்தல பகுதியில் உள்ள வீடொன்றில் ஹீட்டர் வெடித்ததில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

வீட்டில் இருந்த மற்றுமொரு குழந்தை ஹீட்டரைப் பயன்படுத்தியது என்றும், ஹீட்டர் வெடித்த போது தாய் வீட்டில் இல்லை என்றும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. 2

## வவுனியா விபத்தில் இளைஞர் படுகாயம்



(வவுனியா நிருபர்)

வவுனியாவில் வீதியைக் கடக்க முற்பட்ட இளைஞரைப் பிக்கப் ரக வாகனம் மோதித் தள்ளியதில் இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக இன்று இடம்பெற்ற 2

## ரணில் – ராஜபக்ஷ கூட்டணியே வரும் தேர்தலில் களமிறங்கும்

உறுதிப்படுத்தினார் பிரசன்ன



இலங்கையில் இனிவரும் தேர்தலில் அனுபவம் வாய்ந்த புதிய கூட்டணி போட்டியிட எதிர்பார்த்துள்ளது. எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என்பதை எதிர்காலத்தில் தீர்மானிப்போம் – என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க 2

## உறவுகளைத் தேடிய 125 பேர் உயிரிழப்பு




(வவுனியா நிருபர்)

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடி அலையும் உறவுகளில் 125 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். 2

## ஜனநாயகப் போராளிகள் கட்சியின் முதலாவது தேசிய மாநாடு யாழில்



ஜனநாயகப் போராளிகள் கட்சியின் முதலாவது தேசிய மாநாடு யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்றது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தத் தேசிய மாநாட்டில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் முன்னாள் 8

பிணை வழங்கப்பட்ட போதிலும்

## பிரியமாலி தொடர்ந்தும் மறியலில்



திலினி பிரியமாலிக்கு பிணை வழங்கப்பட்டுள்ள போதிலும், பிணைக் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாத காரணத்தால், அவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தென்னிலங்கையைக் கலக்கிய பாரியளவான நிதி மோசடிக் குற்றச்சாட்டில், விளக்கமறியலில் 2

## எதிர்வரும் காலங்களில் 8 மணிநேரம் மின் தடை?



நிலக்கரி பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் போனால், எதிர்வரும் காலங்களில் நாளாந்தம் 7 அல்லது 8 மணித்தியாலங்களுக்கு மின்சாரத்தைத் துண்டிக்க நேரிடும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்கரத்நாயக்கஊடகங்களிடம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2

## படுகொலையாளி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு, மேற்படி அதிகாரிகளை நேற்று அழைத்து முக்கியமான கலந்துரையாடலை நடத்தியதன் பின்னர் அவர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

ஜனசக்தி குறூப் நிறுவனத்தின் தலைவர் தினேஷ் ஈப்டர் படுகொலை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் படுகொலைகள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பிலும் அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டு அறிந்துகொண்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன, மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், பொலிஸ் விசேட செயலணியின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தர, விசேட பணியகத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தனபால, குற்றத் தடுப்பு விசாரணைத் திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசாத் ரணசிங்க, கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் நெவில் டி சில்வா மற்றும் அமைச்சின் இணைப்பு பொலிஸ் அத்தியட்சகர் சுமித் குணரட்ன உள்ளிட்ட துறைசார்ந்த முக்கிய அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## உறவுகளைத் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடி அவர்களது உறவுகள் பல்வேறு போராட்டங்களை நீண்டகாலமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தநிலையில், காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடி அலையும் பெற்றோர்கள் பல துன்பங்களையும், துயரங்களையும் சுமந்து வயோதிபக் காலங்களில் நோய்வாய்பட்டு வைத்தியசாலைகளிலும், ஏனைய உறவுகளின் பாதுகாப்பிலும் இருந்து வருகின்றனர்.

இவ்வாறு தமது உறவுகளைத் தேடி அலைந்த 125 பேர் நோயால் பீடிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். வவுனியா மாவட்டத்தில் 17 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

வக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வீதிகளிலிருந்து தமது போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

சர்வதேசத்தின் தலையீடுகளைக் கோரியும், ஐக்கிய நாடுகள் சபை தமது விடயங்களில் தலையீடு செலுத்தி தீர்வுகளைப் பெற்றுத் தருமாறு வலியுறுத்தியும் உறவுகள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இவர்களது போராட்டம் இன்றுடன் 2 ஆயிரத்து 128 நாட்களை எட்டியுள்ளது.

## மின்சாரத் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைய, இன்றும் (17), நாளையும் (18), நாளைமறுதினமும் (19) நாடளாவிய ரீதியில் சுழற்சி முறையில் 2 மணித்தியாலங்களும் 20 நிமிடங்களும் மின் துண்டிப்பு மேற்கொள்ளப்பட வுள்ளது.

A முதல் L மற்றும் ஊ முதல் நி ஆகிய வலயங்களுக்குட்பட்ட பகுதிகளில், பகல் வேளையில் ஒரு மணித்தியாலமும், இரவில் ஒரு மணித்தியாலமும் 20 நிமிடங்களும் மின்சாரம் துண்டிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## எதிர்வரும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 10 நிலக்கரி கப்பல்களுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதன் காரணமாக, அடுத்த ஆண்டு நிலக்கரி இல்லாமல்போகும் நிலை அதிகமாக உள்ளது.

ஏப்ரல் மற்றும் மே மாதமளவில் இந்தப் பிரச்சினை மேலும் அதிகரித்து, பொறியியலாளர்கள் சங்கம் கூறுவதைப் போன்று, நாளாந்தம் 7 அல்லது 8 மணித்தியாலங்களுக்கு மின்சாரத்தைத் துண்டிக்க நேரிடும்.

எனினும், ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து எந்தவிதத்திலும் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாது. அவ்வாறான நடவடிக்கை முன்னெடுக்கப்படுமாயின் அதற்கு எதிராகச் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் – என்றார்.

## தீயில் எரிந்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹீட்டர் வெடித்ததையடுத்து குழந்தை இருந்த கட்டிலில் தீப்பிடித்து அறைக்குள் தீ பரவியுள்ளது.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லேரியாப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

## ரணில்-ராஜபக்ஷ ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்

நாட்டில் தற்போது ரணில் – ராஜபக்ஷ அரசே இருக்கின்றது. இரு தரப்பும் அனுபவம் வாய்ந்த இரு அணிகள் என்பதால் கூட்டணி அமைப்பில் பிரச்சினை இருக்காது. தற்போது பல கட்சிகளை இந்தக் கூட்டணியில் இணைத்துக்கொள்வதற்கான பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தற்போது தங்களுடைய கட்சியின் அரசியல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இனிவரும் எந்தவொரு தேர்தலையும் சந்திக்கத் தயாராக இருக்கின்றோம். தேர்தலிலும் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையும் உள்ளது – என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்தார்.

## பிரியமாலி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டிருந்த திலினி பிரியமாலிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த அனைத்து வழக்குகளில் இருந்தும் அவருக்குப் பிணை கிடைத்துள்ளது.

நிதி மோசடி தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த திலினி பிரியமாலி மற்றும் ஜானகி சிறிவர்த்தன ஆகியோர் கடும் பிணை நிபந்தனையின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டடது.

இதன்போது குறித்த இருவரும் தலா 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் செல்ல உத்தரவிட்டார். பிணையாளர்களின் வசிப்பிடத்துடனான சொத்து உறுதிப்படுத்தலை முன்வைத்தல், வெளிநாட்டுப் பயணத் தடை மற்றும் மாதாந்தம் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி கையொப்பமிடல் போன்ற நிபந்தனைகள் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளன.

## வவுனியா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பழைய பஸ் நிலையத்தை அண்மித்த பகுதியில் பாதசாரிகள் கடவையற்ற பகுதியில் இளைஞர் ஒருவர் வீதியைக் கடக்க முயன்றுள்ளார். அதன்போது பிரதான வீதியில் பயணித்த வீதி அபிவிருத்தி அதிகார சபை என்ற பெயர்ப் பலகையுடைய பிக்கப் ரக வாகனம் வீதியைக் கடக்க முயன்ற இளைஞரை மோதித் தள்ளியது.

இந்த விபத்தில் இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வாகனத்தின் முன்பகுதி பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விபத்து தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன் வாகனத்தைப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர். (100)



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## படைகளில் ஆள் குறைப்பு

இலங்கை அரசின் அடுத்த வருடத்திற்கான வரவு – செலவு திட்டத்தின் மீதான இறுதி வாக்கெடுப்பின்போது தமிழர் தரப்பு அதற்கு எதிர்ப்புக் காட்ட வில்லை. வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலைமை வகித்தது.

எனினும் குழுநிலை விவாதத்தின் போது பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீடு தொடர்பில் வாக்களிப்புக் கோரி அதில் தனது எதிர்ப்பைப் பதிவு செய்தது தமிழர் தரப்பு.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கமுன்னெடுக்கும் தீர்வு முயற்சிக்கு சாதகமான பிரதிபலிப்பை காட்ட வேண்டும் என்ற நியாயம் கருதி வரவு – செலவுத் திட்டத்தை தமிழர் தரப்பு பகிரங்கமாக எதிர்க்காமல் விட்டாலும், பொருளாதாரத்தால் நலிவுற்றிருக்கும் நாட்டுக்குத் தொடர்ந்து அதிக பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு செய்வது ஆட்சித் தரப்பின் அடக்குமுறை எண்ணவோட்டத்தை காட்டுவதாகவே கருதியது. நாடாளுமன்றத்திலும் இவ்விடயம் தொடர்பிலும் தனது கருத்தை தமிழ்க் கட்சிகள் வலிமையாகப் பதிவு செய்யத் தவறவில்லை.

இப்போது பாதுகாப்பு அமைச்சுக்கான செலவினத்தைக் குறைப்பதற்காக அதிகாரிகள் உட்பட சுமார் 16 ஆயிரம் இராணுவத்தினரை நேரத்துடன் பணி ஓய்வு பெற அனுமதிப்பது என்ற முடிவுக்குப் பாதுகாப்பு அமைச்சு வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கும் இராட்சத நிதி ஒதுக்கீட்டை குறைப்பதற்காக, படைகளில் இருப்போர் அவர்களுக்கான ஒப்பந்த காலத்துக்கு முன்னர் பதவிகளில் இருந்து வெளியேற அல்லது ஓய்வு பெறக் கோரினால் அதைச் சாதகமாகப் பரிசீலிக்கும் படியான யோசனை ஒன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரவு – செலவு திட்ட சமயத்தில் முன் வைத்திருந்தார். அதன் கீழ் இப்போது முற்கூட்டியே ஓய்வுக்கு இடம் அளிக்கும் முடிவுக்குப் பாதுகாப்பு அமைச்சு வந்திருப்பதாக கூறப்படுகிறது

முதற்கட்டமாக படைவிட்டோடிகள் எனகருதப்படும் சுமார் 16 ஆயிரம் இராணுவத்தினருக்கு நிரந்தர ஓய்வு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்காகப் படை விட்டோடிகள் அல்லது சொல்லிக் கொள்ளாமல் சேவைக்குத் திரும்பாதவர்களுக்கு மன்னிப்பளித்து, நிரந்தர விடுவிப்பு வழங்கும் சகாய காலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அது இந்த வருட முடிவு வரை – டிசம்பர் 31 வரை – ஆகும்.

இந்த வகையில் வெளிநாடுகளில் இருப்போர் உட்பட 16,141படை விட்டோடிகள் பொது மன்னிப்பு மற்றும் சேவை விடுவிப்புக்கு விண்ணப்பித்துள்ளார்கள். அவர்களில் 21 அதிகாரிகள் மற்றும் 15 ஆயிரத்து 838 சிப்பாய்களுக்கு ஓய்வு அனுமதி வழங்கப்படுகின்றது. அதேபோல விமானப்படையில் இருந்து சேவைக்கு திரும்ப தவறிய 938 பேரில் 732 பேருக்கு ஓய்வுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எது, எப்படிஎன்றாலும்படைகளுக்குஆள்குறைப்பு எந்த வழியில் வந்தாலும் அது இன்றைய பொருளாதார நிலையில் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று.

# சுதந்திர தினத்திற்கு முன் தீர்வு என ஜனாதிபதி சர்வதேசத்தையும் தமிழர்களையும் ஏமாற்றுகிறார்!

## ஹரினி அமரசூரிய எச்சரிக்கை



நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வு வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை சர்வதேசத்தையும், தமிழ் சமூகத்தையும் ஏமாற்றும் ஒரு செயற்பாடாகும்.

இவரது ஏமாற்று செயற்பாட்டில் பங்காளிகளாக கூடாது என்பதற்காகவே கட்சி தலைவர்கூட்டத்தை புறக்கணித்தோம்.

அனைத்து பிரஜைகளும் சமமாக மதிக்கப்படும் சூழல் அரசமைப்பால் உறுதிப்படுத்த வேண்டும். அதுவே உண்மையான இனப்பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக் கொடுக்கும் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கட்சி தலைவர்களுடனான சந்திப்பை மக்கள் விடுதலை முன்னணியின் பிரதிநிதிகள் புறக்கணித்தமை தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

பாரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தை தோற்றுவித்தார்கள். இருப்பினும் நல்லாட்சி அரசாங்கம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய செயற்படவில்லை.

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற உண்மை நோக்கம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு காணப்படுமாயின் அவர் நல்லாட்சி அரசாங்கத்தில் அதனை செய்திருப்பார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரச தலைவர் அல்லர், அவர் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதி.

அவர்களின் நோக்கத்துக்கு அமையவே அவர் செயற’படுவார். இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கத் தயார் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தர்ம சங்கடத்துக்கு உள்ளான நிலையில் சபையில் வைத்து இணக்கம் தெரிவித்தாரே தவிர அவர் ஒருபோதும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இடமளிக்கமாட்டார். தனது தரப்பினர் ஊடாக அதிகார பகிர்வு விடயத்தை அவர் தடையாக இருப்பார்.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள பின்னணியில் அதிகார பகிர்வுக்கு தான் தயார் என ஜனாதிபதி சர்வதேசத்தையும், தமிழ் சமூகத்தையும் ஏமாற்றும் வகையில் செயற்படுகிறார்.

இவரது ஏமாற்று செயற்பாடுகளுக்கு பங்குதாரராக நாங்கள் தயார் இல்லை. தீர்வு வழங்குவது சாத்தியமற்றதாயின் அது இன நல்லிணக்கத்துக்கு மீண்டும் பாதிப்பை ஏற்படுத்தும்.

அனைத்து பிரஜைகளும் சமமாக மதிக்கப்படும் சூழல் அரசமைப்பால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதுவே உண்மையான இனப்பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும். நாட்டில் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரை இரண்டாம் சமூகம் என அடையாளப்படுத்துவதை அரசமைப்பால் தவிர்க்க வேண்டும்.

புதிய அரசமைப்பில் அனைத்து இன மக்களும் இலங்கையர்கள், இன அடிப்படையில் எவருக்கும் விசேட வரப்பிரசாதங்கள் வழங்கப்பட கூடாது. ஓர் இனத்துக்கு மாத்திரம் அரசமைப்பால் விசேட சலுகை வழங்கப்படும் போது எவ்வாறு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்.– என்றார்.

# ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி தேசிய அமைப்பாளராக மரிக்கார்!



ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி தேசிய அமைப்பாளராக எஸ்.எம் மரிக்கார் நியமிக் கப்பட்டுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி தேசிய அமைப்பாளர் பதவிக்கான நியமனக் கடித்தை எஸ்.எம் மரிக்காரிடம், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று (வெள்ளிக்கிழமை) கையளித்தார். கட்சியின் ஊடகப் பேச்சாளராகவும், உதவி செயலாளராகவும் எஸ்.எம் மரிக்கார் கடமையாற்றி வருவகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முட்டையின் விலை சந்தையில் எகிறல்!

முன்னதாக எதிர்வுகூறப்பட்டதை போலவே தற்போது, சந்தையில் முட்டையின் விலை அதிகரித்துள்ளதாக அறியமுடிகின்றது.

நுகர்வோர் அதிகார சபையால் முட்டைக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் செய்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இடைநிறுத்த தீர்மானித்ததையடுத்து இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் வெள்ளை முட்டை ஒன்றின் விலை 43 ரூபாவாகவும் சிவப்பு நிற முட்டை ஒன்றின் விலை 45 ரூபாவாகவும் நுகர்வோர் அதிகாரசபை நிர்ணயித்திருந்தது.


இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை பெப்ரவரி 6 ஆம் திகதி வரை இடைநிறுத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் வியாழக்கிழமை தீர்மானித்ததையடுத்து அதுவரை 50 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட முட்டையின் விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


முட்டைக்கான அதிகபட்ச விலையை நிர்ணயிக்கும் திறனை நுகர்வோர் விவகார அதிகாரசபை தற்காலிகமாக இழந்ததையடுத்து, உற்பத்தியாளர்கள் தங்களுக்குத் தேவையான விலையை நிர்ணயித்துள்ளனர்.



# பிரான்ஸ் அடுக்குமாடிக் குடியிருப்பில் தீ குழந்தகள் உள்பட 10பேர் உயிரிழப்பு







பாரீஸ், டிச.17

பிரான்ஸ் நாட்டின் ரோன் மாகாணம் வால்க்ஸ் என் வெலின் நகரில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் நேற்று தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தகவலறிந்த தீய ணைப்புப்படையினர் அப்பகுதிக்கு உடனடியாக விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.


இந்தத் தீ விபத்தில் 5 குழந்தைகள் உள்பட 10 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர். மேலும் காயமடைந்த 14 பேரை தீயணைப்பு படையினர் மீட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இதில் 4 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது.

இந்த தீ விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாகத் தெரியவில்லை என்றும், இது குறித்துப் பொலிஸார வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

# மலேசிய சுற்றுலாத் தலத்தில் நிலச்சரிவு 5 வயதுக் குழந்தை உள்பட 21 பேர் பலி

## பன்னிருவரைக் காணவில்லை







கோலாலம்பூர், டிச.17

மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் இருந்து 50 கிலோ மீற்றர் தொலைவில் அமைந் துள்ள படாங் காளி என்கிற நகரத்தில் பல ஏக்கர் பரப்பளவில் மிகப்பெரிய இயற்கை விவசாய பண்ணை உள்ளது. இந்த விவசாய பண்ணை உள்ளூர் சுற்றுலா பயணிகளுக்கான பிரபல மான பொழுதுபோக்கு தலமாக இருந்து வருகிறது.

உள்ளூர்வாசிகள் இந்த பண்ணையை வாட கைக்கு எடுத்து அங்கு குடில்களை அமைத்து பொழுதைக்கழிப்பதைவழமையாகக்கொண்டுள்ளனர். அந்த வகையில் இந்த பண்ணையில் சுமார் 100 சுற்றுலா பயணிகள் குடில்களை அமைத்து தங்கியிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று அதிகாலை அங்கு திடீ ரென பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. 30 மீற்றர் உயரத்தில் இருந்து மண் சரிந்து விழுந்ததில், சுமார் ஒரு ஏக்கர் நிலம் மண்ணால் மூடப்பட்டது. இந்த நிலச்சரிவில் அங்கிருந்த சுற்றுலா பயணிக ளின்குடில்கள் மண்ணோடு மண்ணாக புதைந்தன. இதில் குடில்களில் இருந்த பலர் உயிரோடு மண் ணில் புதைந்தனர்.

இது குறித்த தகவல் கிடைத்ததும் பொலிசார், தீயணைப்பு வீரர்கள் மற்றும் பேரிடர் மீட்பு குழுவினர் என சுமார் 400 பேர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீவிர மீட்பு பணிகளில் ஈடுபட்டனர். இதன் பலனாக 53 பேர்க்காயங்கள் எதுவும் இன்றி பத்திரமாக மீட்கப்பட்டனர்.

தொடர்ந்து நடந்த மீட்பு பணிகளில் 5 வயது பச்சிளம் குழந்தை உள்பட 21 பேர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டனர். மேலும், 7 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு அருகில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டனர். மேலும் இந்த நிலச்சரிவில் 12 பேர் மாயமாகி உள்ளனர். அவர்களின் கதி என்ன என்பது தெரிய வில்லை. இதனால் பலி எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கக்கூடும் என்கிற அச்சம் நிலவுகிறது. மாயமானவர்களை தேடும்

பணியில் மீட்பு குழுவினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



# இளைஞனை முத்தமிட்ட பெண்ணுக்கு சிறைத் தண்டனை; சூடானில் சம்பவம்

கார்ட்டூம், டிச.17

சூடானில் வாலிபரை முத்தமிட்ட இளம்பெண்ணுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் அவர் சர்வதேச நாடுகளின் எதிர்ப்பால் மரண தண்டனையில் இருந்து தப்பியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆப்பிரிக்க நாடான சூடானில் தற்போது ராணுவ ஆட்சி நடந்து வருகிறது. அங்கு திருட்டு, விபசாரம் உள்ளிட்ட குற்றங்க ளுக்கு கைகளை துண்டித்தல், கல்லால் அடித்து மரண தண்டனை நிறைவேற்றுதல் போன்ற கடுமையான தண்டனைகள் வழங்கப்படுகின்றன.

இந்த நிலையில் அங்குள்ள ஒயிட்நைல் மாகாணத்தை சேர்ந்த, திருமணமாகி விவாகரத்தான 20 வயது இளம்பெண், வாலிபர் ஒருவருடன் நெருங்கிப் பழகி வந்துள்ளார். இந்த சூழலில் அவர்கள் இருவரும் நெருக்கமாக இருந்ததை பார்த்த அப்பெண்ணின் உறவுக்காரர் ஒருவர் ஆத்திரத்தில் அந்த வாலிபரை கொலை செய்தார். இதனையடுத்து திருமணத்துக்குப் பின் கணவர் அல்லாத மற்றொரு ஆணுடன் நெருக்கமாக இருந்ததால் அந்த பெண் மீது விபசார வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதனை விசாரித்த நீதிமன்றம் அந்த பெண்ணை கல்லால் அடித்து மரண தண்டனை நிறைவேற்ற உத்தரவிட்டது. இதற்கு சர்வதேச அளவில் எதிர்ப்புகள் வலுத்ததை தொடர்ந்து, தண்டனை வாபஸ் பெறப்பட்டு வழக்கு மறுவிசாரணை செய்யப்பட்டது.

விசாரணையில் அந்த பெண் தனது காதலனுடன் நெருக்க மாக இருந்தபோது முத்தமிட்டதை ஒப்புக்கொண்டார். இதனையடுத்து அவருக்கு 6 மாதம் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

# ஐ.நா. பெண்கள் உரிமை அமைப்பில் இருந்து ஈரான் வெளியேற்றம்; தீர்மானம் நிறைவேற்றம்

ஜெனீவா, டிச.17

ஐ.நா. சபையின் பெண்கள் உரிமைக் கான அமைப்பிலிருந்து ஈரானை நீக்கும் தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வந்தது. ஈரானில் நடைபெற்று வரும் ஹிஜாப் போராட்டங்களின் போது பெண் கள் மீதான மனித உரிமை மீறல்கள் நடந்தன என அந்த தீர்மானத்தில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக 29 நாடுகளும், எதிராக 8 நாடுகளும் வாக்களித்தன. இந்தியா உள்பட மொத்தம் 16 நாடுகள் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. இதையடுத்து ஈரானுக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர் மானம் வெற்றி பெற்றது. இதன் மூலம் ஐ.நா.வின் பெண்கள் அமைப்பிலிருந்து ஈரான் நீக்கப்பட்டுள்ளது.






# உலகப் பயங்கரவாதத்தின் மையம் பாகிஸ்தான் என இந்தியா சீற்றம்!

## ஐ.நாவில் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவிப்பு

வாஷிங்டன், டிச.16

அமெரிக்காவில் உள்ள ஐ.நா. சபையில் நேற்று இந்தியாவின் தலைமையில் 'உலகப் பயங்கரவாதத் தடுப்பு வழிமுறைகள்' என்ற தலைமையில் விவாத நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு பின் ஐ.நா.சபையில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது, 'இந்தியாவை விட எந்த நாடும் பயங்கரவாதத்தை சிறப்பாக பயன்படுத்தியதில்லை' என்று பாகிஸ்தான் வெளியுறவுத்துறை இணை அமைச்சர் ஹினா ரபானி ஹர் கூறியது தொடர்பாக கேள்வி எழுப்பபட்டது. அந்த கேள்விக்கு பதில் அளித்த ஜெய்சங்கர், பாக். அமைச்சர் ஹினா ரபானி பேசியதை நான் பார்த்தேன். அவர் குறித்த செய்திகளை நான் வாசித்தேன். நான் 10 ஆண்டுகளுக்கு முன் நடந்ததை நினைவு கூறுகிறேன். ஹிலாரி கிளிண்டன் (அமெரிக்க வெளியுறவுத்துறை முன்னாள் அமைச்சர்) பாகிஸ்தானுக்கு பயணம் மேற்கொண்டார். ஹினா அப்போது அமைச்சராக இருந்தார். ஹினா அருகில் இருந்தபோது ஹிலாரி கூறியது என்னவென்றால், 'உங்கள் வீட்டிற்கு பின்னால் பாம்புகளை வைத்திருந்தால், அது உங்கள் அண்டை வீட்டுக்காரரை மட்டும் கடிக்கும் என்று நீங்கள் எதிர்பார்க்கக் கூடாது. மாறாக தங்களை வைத்திருக்கும் மக்களையும் பாம்பு கடிக்கும் ஆனால், உங்களுக்கு தெரியும். சிறந்த அறிவுரைகளை பாகிஸ்தான் விரும்பாது என்று கூறினார்' என்றார்.

பயங்கரவாதத்தின் மையமாக பாகிஸ்தானைப் பார்க்கிறத. உலகம். பயங்கரவாதம் எங்கிருந்து வருகிறது என்று உலகம் மறந்துவிடவில்லை' என்றார்

# இந்து நாடாக மாறுகிறது இந்தியா அமெ. எம்.பி. லெவின் தெரிவிப்பு!



வொஷிங்டன்,டிச.17

இந்தியா ஓர் இந்து நாடாக மாறும் அபாயத்தை எதிர் கொண்டுள்ளதாக அமெரிக்க எம்.பி. அண்டி லெவின் தெரிவித்துள்ளார். மிச்சிகன் மாகாணம் சார்பில் கடந்த 2019 முதல் ஜனநாயக கட்சியின் எம்.பி.யாக இருந்த லெவின், அண்மையில் நடைபெற்ற தேர்தலில் தோல்வி அடைந்தார். இந்நிலையில் பதவியில் இருந்து விலகுவதற்கு முன்னர் பிரதிநிதிகள் சபையில் அவர் ஆற்றிய உரையிலே அவர் இவ்வாறு கூறியுள்யார்.

அவர் குறிப்பிடுகையில், அமெரிக்கா மனித உரிமைகளைக் காப்பாற்றுவதில் அதிக வெற்றியைப் பெற்றுள்ளது, இருப்பினும் நிலைமை பல பகுதிகளில் மோசமாக இருந்தது. மதச்சார்பற்ற ஜனநாயக நாடான இந்தியா, தற்போது ஓர் இந்து நாடாக மாறும் அபாயத்தை எதிர் கொண்டுள்ளது.

நான் இந்து மதத்தை நேசிப் பவன், இந்தியாவில் பிறந்த சமணம், பௌத்தம் மற்றும் பிற மதங்களை நேசிப்பவன், ஆனால் அங்குள்ள அனைத்து மக்களின் உரிமைகளையும் நாம் பாதுகாக்க வேண்டும்.

அவர்கள் முஸ்லிம்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், ஜைனர்கள் என யாராக இருந்தாலும் சரி. இன்றைய நரேந்திர மோடியின் இந்தியா நான் காதலித்த இந்தியா கிடையாது. நான் நேசிக்கும் ஒரு நாட்டை நான் ஏன் இவ்வளவு பகிரங்கமாக விமர்சிக்க வேண்டும்? ஏனென்றால் நான் இந்தியாவை நேசிப்பதால்தான், அதன் மக்கள் மீதான தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதில் நான் உறுதியாக இருக்கிறேன். ஓர் இளைஞனாக நான் அறிந்த துடிப்பான இந்திய ஜனநாயகத்திற் கான எனது ஆதரவில் நான் மிகவும் உறுதியாக இருக்கிறேன். தலைமுறை தலைமுறையாக அந்த ஜனநாயகம் செழிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். என்று அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் காணாமல் போன நடராஜர் சிலை பிரான்ஸில் மீட்பு

சென்னை,டிச.17

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகே உள்ள கயத்தாறில் இருக்கும் கோதண்ட ராமேஸ்வரர் கோவிலில் இருந்து பழமையான நடராஜர் உலோக சிலை திருட்டு போயிருந்தது. 15 ஆம் நூற்றாண்டை சேர்ந்த இந்த சிலை கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு திருட்டு போனது.

இது தொடர்பாக கோவில்பட்டி பொலிஸார் அப்போதே வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர்.

இந்த நிலையில் இந்த நடராஜர் சிலை, பிரான்ஸ் நாட்டு தலைநகர் பாரீசில் உள்ள ஏலக்கடையில் இருப்பது தெரிய வந்தது. மேலும் அந்த சிலையை ஏலம் விடப்போவதாக அறிவிக்கப்பட்டு இருந்தது.

இதன் காரணமாக குறித்த நடராஜர் சிலையை மீட்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உடனடியாக சிலை கடத்தல் தடுப்பு பிரிவு பொலிஸார், பிரான்ஸ் நாட்டு இந்திய தூதரகம் வாயிலாக மேற்படி சிலையை ஏலம் விடாமல் தடுத்து நிறுத்தியுள்ளனர். மேலும், அந்த சிலையை மீட்டு, தமிழகம் கொண்டுவர உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.





# பிரதமர் மோடி கசாப்புக் கடைக்காரர் பாதுகாப்புக் கவுன்ஸிலில் விமர்சனம்!

வாஷிங்டன், டிச.17

அமெரிக்காவில் உள்ள ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் நேற்றுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பேசிய பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர்ப்பிலாவல் பூட்டோ சர்தாரி, காஷ்மீர் தொடர்பாக ஐ.நா. சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இந்தியா நடைமுறைப்படுத்த வேண்டும்' என்று கூறினார்.

இந்நிலையில், அவருக்கு அவையில் பதில் கொடுத்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர்ஜெய்சங்கர்,ஒசாமாபின்லேடனுக்கு உறைவிடம் கொடுதவர்கள், அண்டை நாட்டு நாடாளுமன்றத்தை தாக்கியவர்கள், நம்பகத்தன்மை குறித்து இந்த சபையில் பிரசாரம் செய்ய வேண்டாம் என்றார்.

இந்நிலையில், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரின் கருத்துக்கு பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் பிலாவல் பூட்டோ சர்தாரி பதில் கூறுகையில், ஒசாமா பின்லேடன் இறந்துவிட்டார்.

ஆனால், குஜராத் கசாப்புக்கடைக்காரர் வாழ்கிறார். அவர் இந்தியாவின் பிரதமராக (மோடி) உள்ளார். அவர் (பிரதமர் மோடி) இந்த நாட்டிற்குள் (அமெரிக்காவினுள்) நுழைய

தடைவிதிக்கப்பட்டது. பிரதமரும் (மோடி), வெளியுறவுத்துறை அமைச்சரும் (ஜெய்சங்கர்) ஹிட்லரின்நாசிகொள்கைகளால் ஈர்க்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச்சேர்ந்தவர்கள் என்றார்.







# திருக்கோவில் நிகழ்வுகளில் சுமந்திரனும் சாணக்கியனும்

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான .எம்ஏ சுமந்திரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஆகியோர் இன்று சனிக்கிழமை அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்தனர்.

அச்சமயம் வடகிழக்கு மறுவாழ்வு அமைப்பின் சார்பின் வாழ்வாதார உதவிட்டங்களும் மாணவர்களுக்கான கற்றல் உபரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் ஆகியோரின் பங்குபற்றலில் இன்று சனிக்கிழமை திருக்கோவில் பிரதேசத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

பின்னர் கட்சி உறுப்பினர்களுடான சந்திப்பும் இடம்பெற்றது.

# நாவலரின் 200 ஆவது அகவை குரு பூஜை காரைதீவில் நாளை

(வேதசகா)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 200ஆவது அகவை நிறைவினை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குரு பூஜையும் விழாவும் நாளை காரைதீவில் நடைபெறவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணி மண்டபத்தில் இந் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது.

திருமுன்னிலை அதிதியாக காரைதீவு ஸ்ரீ கண்ணகையம்மன் ஆலயத்தின் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் கலந்துகொள்ள, பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பிப்பார்.

காலையில் கண்ணகை அம்மன் ஆலய முச்சந்தியில் அமையப்பெற்ற சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச் சிலையை வழமை போல் வணங்கி ஊர்வலம் ஆரம்பமாகும்.

ஊர்வலம் நேராக சுவாமி விபுலானந்த மணி மண்டபத்தை அடைந்ததும், நாவலர் பெருவிழா நடைபெறும்.

ஆன்மீக அதிதிகளாக காரைதீவு வீரபத்திரர் சுவாமி ஆலயத்தின் சிவஸ்ரீ சாந்தரூபன் குருக்கள், காரைதீவு நந்தவன சித்தி விநாயகர் ஆலயத்தின் சிவஸ்ரீ மகேஸ்வர குருக்கள், பெரிய நீலாவணைமகாவிஷ்ணுதேவஸ்தானத்தின்சிவஸ்ரீந.பத்மலோஜசிவம், நாவிதன்வெளி முருகன் ஆலயத்தின் சிவஸ்ரீ சுபாஸ்கர சர்மா ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

கௌரவ அதிதியாக காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கலந்து சிறப்பிப்பார்.

திருக்கோவில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிறப்பு அதிதிகளாக சோ.ஸூரநுதன், கல்முனை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சஞ்சீன், சம்மாந்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்து கொள்வார்கள். மேலும் விடே அதிதிகளாக ஒன்பது பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்.

ஏற்பாடுகளை, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு. ஜெயராஜி மேற்கொண்டுள்ளார்.



# செயலகக் கேட்போர் கூடம் திருமலையில் திறந்துவைப்பு

(ஹஸ்பர்)

இருபத்தியைந்து லட்சம் ரூபா செலவில் புனர்நிர்மானம் செய்யப்பட்ட திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக கேட்போர் கூடம் நேற்று திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரமவினால் திறந்து வைக்கப்பட்டது.

உரிய மண்டப வசதி இன்மையால் கடந்த காலங்களில் அதிக எண்ணிக்கையானவர்களை கொண்டு கூட்டங்களை நடாத்துவதிலும் அதிகாரிகள் சிரமங்களை முகங்கொடுத்தனர்.

இப்புனர்நிர்மாண பணி காரணமாக அலுவலக கூட்டங்கள் உள்ளிட்ட செயலமர்வுகளை இடர்பாடின்றி மேற்கொள்ள இக்கேட்போர் கூடம் ஏதுவாக அமைந்துள்ளது.

இந்நிகழ்வில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பி.தனேஸ்வரன் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் இடம்பெற்ற சூழலியல் ஊடகவியல் பயிற்சி





(பழுவூரான்)

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தினால் மாகாண ஊடகவியலாளர்களுக்கென நடாத்தப்படும் இரண்டு நாள்களைக் கொண்ட சூழலியல் ஊடகவியல் பயிற்சி செயலமர்வு மட்டக்களப்பிலுள்ள தனியார் விடுதியில் நேற்றும் நேற்று முன்தினமும் இடம்பெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.நஜீம் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளரும் பத்திரிகை ஆசிரியருமானமுகமதுபைரூஸ்ஆகியோர்வளவாளர்களாகக் கலந்து கொண்ட இந்தச் செயலமர்வில், இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டு செயலமர்வினை வழிநடத்தினர்.

இச் செயலமர்வின் போது சுற்றுச் சூழலுக்கும்– மனிதர்களுக்கும் இடையே இணைப்பை உருவாக்குதல், சுற்றுச் சூழல் ஊடகவியலில் ஊடகவியலாளர்களின் பணி, சுற்றுச் சூழல் அறிக்கையிடலின் முக்கியத்துவம், வளங்களை பாதுகாத்தல் தொடர்பான செய்தியறிக்கையினை மேற்கொள்வதில் உள்ள சவால்கள், சுற்றுச் சூழல் பிரச்சினைகளுக்கு பின்னால் உள்ள இயக்கிகள் மற்றும் தகவல் அறியும் சட்டமூலம் என்பன தொடர் பாக ஊடகவியலாளர்கள் தெளிவுபடுத்தப்பட்டனர்.

அத்தோடு செயலமர்வின் நிறைவில் பங்குபற்றிய ஊடகவியலாளர்களுக்கு இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தினால் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# தம்பலகாமம் பகுதியில் உளநலச் செயலமர்வு!



(ஹஸ்பர்)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான உளநலம் மற்றும் மன அழுத்தம் தொடர்பிலான செயலமர்வொன்று நேற்று இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம்பெற்ற இந்தச் செயலமர்வில் உளநல ஆரோக்கியம், மன அழுத்தம், போதைப் பொருள் பாவனையின் தாக்கம் உள்ளிட்ட பல விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டன. ஆரோக்கியமான குடும்ப வாழ்வுக்கு உளவளம் எவ்வாறு தங்களை மகிழ்ச்சிப்படுத்துகிறது, அதற்காக எவ்வாறான முறைகளை கையாள வேண்டும் என்பன தொடர்பிலும் வளவாளராக கலந்துகொண்ட கிண்ணியா தளவைத்தியசாலையின் உளநலப் பிரிவின் பொறுப்பதிகாரி வைத்தியர் ஏ.கே.எம்.நஸ்மி தெளிவூட்டினார். இவ் நிகழ்வினை யுனிசெவ் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது.

இதில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# வடக்கில் கால்நடைகள் காப்பகம் அமைக்க சமூக தொண்டு நிறுவனங்கள் உதவவேண்டும்

## வடமாகாண கால்நடை பணிப்பாளர் வைத்தியர் சி.வசிகரன் கோரிக்கை

வடக்கில் கால்நடைகள் காப்பகம் ஒன்றை அமைப்பதற்கு சமூக தொண்டர் நிறுவனங்கள் மற்றும் சமூக நலன் சார்ந்து சிந்திப்போர் உதவுமாறு வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் சிவகுருநாதன் வசிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

காலநிலை சீரின்மையால் கடந்த வாரம் வடக்கில் நூற்றுக்கணக்கான கால்நடைகள் உயிரிழந்துள்ளன. வடக்கில் உள்ள கால்நடைகளைப் பாதுகாக்கக் கூடியதாகவும் இந்தக் கால்நடைகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்த கூடியதாகவும் சில திட்டங்களை முன்வைக்க வேண்டியது அவசியமாகும்.

வடக்கு மாகாண ஆளுநருடைய எண்ணத்தில் உருவான பாதுகாப்பான புகழிடங்கள் இந்தியாவிலேயே இருக்கின்றது. கட்டாக்காலி மாடுகளை ஒரு ஜீவராசிகளாகக் கணித்து அவர்களுக்கு ஒரு வாழ்விடத்தை கொடுக்க வேண்டும்.

அவற்றுக்கு உணவை வழங்க வேண்டும் உணவும் அவர்களுக்கான உறையுளும் வாழுகின்ற உரிமையும் மனிதருக்கு இருப்பதைப் போல சகல மிருகங்களுக்கும் இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவது எமது இலங்கை அரசாங்கத்தினுடைய சட்டங்களிலே பெரும்பாலான சட்டங்களாக இருக்கின்றன வன விலங்குகளுக்கும் இதே போல ஒரு சட்ட நடைமுறை காணப்படுகின்றது.

ஆகவே, இந்த மிருகங்களை நாங்கள் வதை செய்யாது அவற்றுக்கு ஒரு பொருத்தமான வாழ்விடத்தை வழங்கும் அதே நேரம் விவசாயம் மற்றும் வீதிப் போக்குவரத்து போன்றவற்றுக்கு இடையூறு இல்லாதவாறு செய்யக்கூடிய கால்நடைகளுக்கான புகலிடங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பது வடக்கு ஆளுநருடைய ஒரு நீண்ட கால கருத்தாகவும் கோரிக்கையாகவும் இருக்கின்றது.

ஆகவே, அந்த கோரிக்கையிலே நடைமுறைப்படுத்த வேண்டுமாக இருந்தால் இதற்காக நிறைய நிதி தேவைப்படும். இவற்றுக்கான கட்டமைப்புகளை மேற்கொள்ள உணவு வழங்குவதற்கு என நிறைய நிதி தேவைப்படும். அதே நேரம் அந்த கால்நடைகளில் இருந்து கிடைக்கக்கூடிய பல்வேறு வருமானங்கள் அவ்வாறான புகழிடத்தை நடத்துபவர்களுக்கு ஓரளவு வருமானத்தைக் கொடுக்கக் கூடும்.

ஆகவே, இதனை பண்ணையாளர்கள் தங்களால் பராமரிக்க முடியாது. இந்த சட்டங்களை நாங்கள் நிறைவேற்றியதன் பின்னர் எங்களால் பராமரிக்க முடியாது எனக் கருதுகின்ற மாடுகளாக இருக்கலாம். அல்லது வீதிகளிலே எந்தவித உரிமையாளர்களும் இல்லாத மாடுகளாக இருக்கலாம். அவற்றை இந்த பாதுகாப்பான புகழிடங்களில் கொண்டு வந்து பராமரிக்க வேண்டும்.

இவ்வாறான, ஒரு நடவடிக்கை செய்வதற்கு நாங்கள் பலருடைய ஆதரவையும் நிதி மற்றும் ஏனைய ஆதரவுகளைப் பெற வேண்டி உள்ளது. எங்களுடைய திணைக்களத்தைப் பொறுத்தவரை இவ்வாறான நிலையங்களிலே வளர்க்கப்படு கின்ற மாடுகளுக்கான சுகாதாரம் அல்லது அவற்றுக்கான சுகநலன்களைப் பராமரிப்பதற்கு ,சிகிச்சை தொழில்நுட்ப ,ஆலோசனைகளை வழங்கத் தயாராக உள்ளோம்.

இவ்வாறு நிலையங்களை நடத்துவதற்கு ஆலயங்கள் ஆலய பரிபாலன சபைகள் மற்றும் இந்து, புத்த சமய நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட தனியார் தொண்டு நிறுவனங்கள் அல்லது தனியார் நபர்கள் முன்வருவார்களாக இருந்தால் அவர்களுக்கு தேவையான பூரண ஒத்துழைப்பை வழங்கி அந்த நிலையங்களை நடத்துவதற்கான காணிகள் இனம் கண்டு அவற்றை அவர்களுக்கு விடுவித்து அந்த நிலையங்களில் உருவாகின்ற சேதன பசளைகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு கொடுப்பது போன்ற பல்வேறு உதவிகளை அரச நிறுவனங்கள் என்ற ரீதியில் நாங்கள் செய்யலாம்.ஆகவே, இந்த கோரிக்கையை சமூக ஆர்வலர்கள் அல்லது தொண்டு நிறுவனங்கள் கருத்தில் எடுத்து அவ்வாறு யாராவது இந்த நடவடிக்கை கொண்டு நடத்த விரும்பினால் வடக்கு மாகாண ஆளுநருடன் தொடர்பு கொண்டு அதனை செயற்படுத்துவதற்கு நாங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கவோம். – என்றார்.

# தங்கள் உயிரை பணயம் வைத்து யுவதியை காப்பாற்றிய பொலிஸார்!



புத்தளம், வென்னப்புவ பொலிஸ் போக்குவரத்து பிரிவைச் சேர்ந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயிரை பணயம் வைத்து நீரில் மூழ்கிக்கொண்டிருந்த யுவதியைக் காப்பாற்றியுள்ளனர்.

பொரலஸ்ஸ பிரதேசத்தில் வசிக்கும் 22 வயதுடைய யுவதியே நீரில் மூழ்கி உயிருக்கு ஆபத்தான நிலைமையில் காணப்பட்டுள்ளார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) முற்பகல் 11 மணியளவில் ஹலவத்தையில் இருந்து கொழும்பு செல்லும் பிரதான வீதியில் ஹனஹொட்டுபொல சந்தியிலிருந்து பொரலஸ்ஸ பகுதிக்கு செல்லும் பக்க வீதியில் கிங் ஓயாவின் மீது கட்டப்பட்டுள்ள பாலத்துக்கு அருகில் இந்த யுவதி நீரில் மூழ்கியுள்ளார். வென்னப்புவ பொலிஸ் போக்குவரத்து பிரிவில் கடமையாற்றும் கான்ஸ்டபிள்களான பிரசாத் குமார மற்றும் ஜீவன் பெர்னாண்டோ ஆகியோர் வென்னப்புவ பொலிஸாரிலிருந்து பொரலஸ்ஸ பகுதிக்கு கடமைக்காகச் சென்று கொண்டிருந்த போது கிங் ஓயா பாலத்துக்கு அருகில் இந்த யுவதி நீரில் மூழ்கிக் கொண்டிருப்பதை அவதானித்துள்ளனர்.

உடனடியாக மோட்டார் சைக்கிளை நிறுத்திய கான்ஸ்டபிள்கள், தங்கள் உயிரை பணயம் வைத்து நீரில் குதித்து யுவதியின் தலை முடியை பிடித்து கரைக்கு கொண்டு வந்து முதலுதவி சிகிச்சை அளித்துள்ளனர்.

அதனையடுத்து 1990 என்ற அம்புலன்ஸ் சேவைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு மாரவில பொது வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது.

மேற்படி யுவதி நீரில் மூழ்கிக் கொண்ருக்கும் போது வீதியில் சென்றவர்களிடம் உதவி கேட்ட போதிலும் நீர் ஆபத்தான மட்டத்தில் இருந்தமையால் ஒருவரும் உதவ முன்வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. அந்த யுவதி தன்னைக் காப்பாற்றிய இரண்டு பொலிஸாரின் காலில் விழுந்து வணங்கி, தன் உயிரைத் திரும்பக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துள்ளார்.

25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் கையடக்கத் தொலைபேசி நீரில் விழுந்து நாசமாகியுள்ளது.

# நானாட்டானில் வயோதிப தம்பதியை தாக்கிப் பணம் நகைகள் கொள்ளை!

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள உமநகரி கிராமத்தில் தனிமையில் வசித்து வந்த வயோதிப தம்பதியை தாக்கி 50 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 30 பவுனுக்கு மேற்பட்ட தங்க நகைகள் கொள்ளை இடப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் நேற்று (வெள்ளிக்கிழமை )அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில் –

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள உமநகரி கிராமத்தில் தனிமையில் வசித்து வந்த வயோதிப தம்பதியினரின் வீட்டினுல் நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை உள் நுழைந்த திருடர்கள் வீட்டின் கூரை ஓடுகளை உடைத்து உள்ளே நுழைந்துள்ளனர்.

மூன்று கொள்ளையர்கள் வீட்டினுள் நுழைந்த நிலையில் ஆயுதங்களால் தம்பதியினர் இரு வரை சரமாரியாக தாக்கி பணம் மற்றும் தாலிக்கொடி உட்பட 30 பவுனுக்கு மேற்பட்ட நகைகளை களவாடிச் சென்றுள்ளனர்.

பலத்த காயங்களுக்கு உள்ளான பெண் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த மன்னார், முருங்கன் பொலிஸார் மற்றும் தடயவியல் பிரிவினர் முதற்கட்ட விசாரணைகளை மேற்கொண்டு பார்வையிட்ட பின் முருங்கன் பொலிஸார் தொடர்ந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி வீட்டில் சில வருடங்களுக்கு முன்பும் பாரிய திருட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.



# உடுவிலில் கசிப்புடன் ஒருவர் கைதானார்!

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடுவில்– மல்வம் பகுதியில் 1500 மில்லிலீற்றர் கசிப்புடன் 27 வயதுடைய இளைஞன் ஒருவர் நேற்று (வெள்ளிகிழமை) கைது செய்யப்பட்டார்.

சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது மேற்படி சந்தேகநபர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த வேளை இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# எல்ல சுற்றுலா வலயத்தை அபிவிருத்தி செய்யத் துரித நடவடிக்கை எடுக்குக!

## ஜனாதிபதி பணிப்பு

எல்ல சுற்றுலா வலயத்தை பாரிய திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரைவிடுத்துள்ளார்.

எல்ல வர்த்தகர்கள் சங்கத்துடன் நேற்று (வெள்ளிக்கிழமை) முற்பகல் நடந்த கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சுற்றுலா அமைச்சு, நகர அபிவிருத்தி அமைச்சு ஆகியன இணைந்து 4 மாதங்களுக்குள் அதற்கான திட்டத்தை தயாரித்து தன்னிடம் ஒப்படைக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

எல்ல வர்த்தகர்கள் சங்கத்துடன் நேற்று (வெள்ளிக்கிழமை) முற்பகல் நடந்த கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

ரம்மியமான இயற்கைக்கு பங்கம் ஏற்படாத வகையில் நிர்மாணப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

முதற்கட்டமாக எல்ல சுற்றுலா வலயம் முறையான திட்டத்துடன் அபிவிருத்தி செய்து, அதன் பின்னர் ஊவா மாகாணம் முழுவதையும் சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த இடமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## கொழும்பை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று விசாரணைகளை முன்னெடுக்கும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, தினேஷ் ஷாப்டரின் காரில் இருந்த சாட்சியங்கள் மற்றும் சம்பவ இடத்தில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளுக்கு அமைய, சந்தேகநபர்களை அடையாளம் காணுவதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பிரபல வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் படுகொலை தொடர்பில் பிரபல கிரிக்கெட் வர்ணனையாளர் பிரைன் தோமஸிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நேற்றுமுன்தினம் இரவு வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

படுகொலை செய்யப்பட்ட வர்த்தகரிடம், பிரைன் தோமஸ் பெற்றுக் கொண்ட கோடிக்கணக்கான ரூபா பணம் தொடர்பான பிரச்சினை குறித்தும் இதன்போது விரிவாக வினவப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடல் ஒன்றுக்குச் செல்வதாக தமது மனைவிடம் கூறிவிட்டு நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணி முதல் 3 மணிவரையான காலப்பகுதியில், கொள்ளுப்பிட்டி, மலர் வீதிப் பகுதியில் உள்ள தமது வீட்டிலிருந்து தினேஷ் ஷாப்டர் வெளியேறியுள்ளார்.

எவ்வாறிருப்பினும், தம்மிடமிருந்து கோடிக்கணக்கான ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்ட கிரிக்கெட் வர்ணனையாளர் பிரைன் தோமஸைச் சந்திக்கச் செல்வதாக, தமது செயலாளரிடம் தினேஷ் ஷாப்டர் கூறியிருந்தார் என்று பொரளை பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவலின் அடிப்படையில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர், நேற்றுமுன்தினம் இரவு பிரைன் தோமஸின் வீட்டுக்குச் சென்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

இந்தநிலையில், பிரைன் தோமஸுக்கு வெளிநாட்டு பயணத் தடை விதித்து, கொழும்பு மேலதிக நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் குறித்த விசாரணைகளுக்கு அமைய, பொரளைப் பொலிஸார் நீதிமன்றத்தில் முன்வைத்த விண்ணப்பத்துக்கு அமைய, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், தினேஷ் ஷாப்டரின் தொலைபேசித் தரவுகளை வழங்குமாறு, சம்பந்தப்பட்ட தொலைபேசிச் சேவை நிறுவனங்களுக்கும் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

## ஜனநாயகப்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோ தராதலிங்கம் (ரெலோ), வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் எஸ்.நிஷாந்தன் உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் வடக்கு, கிழக்கு மாகாண உறுப்பினர்கள், முன்னாள் போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளை ஜனநாயக ரீதியில் அரசியல் நீரோட்டத்தில் இணைந்து ஜனநாயகப் போராளிகள் கட்சியை ஆரம்பித்து ஏழுவருடங்களின் பின்னர் கட்சியின் முதலாவது தேசிய மாநாடு இன்று நடைபெற்றது.

இதன்போது கட்சியின் நிர்வாகக் கட்டமைப்பு அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன், கட்சியின் கொள்கைப் பிரகடனம் கட்சியின் தலைவரால் வெளிப்படுத்தப்பட்டது. அத்துடன் வருகை தந்த அரசியல் பிரமுகர்களின் வாழ்த்து மற்றும் கருத்துரைகளும் இடம்பெற்றன.

கட்சியின் தலைவராக மீண்டும் சி.வேந்தன், உப தலைவராக ந.நகுலேஸ், செயலாளராக இ.கதிர், உப செயலாளராக த.கவியரசன், பொருளாளராக த.விதுரன், தேசிய அமைப்பாளராக க.துளசி, மட்டு., அம்பாறை மாவட்ட இணைப்பாளராக ந.நகுலேஸ், வவுனியா மாவட்ட இணைப்பாளராக நெல்சன், திருகோணமலை மாவட்ட இணைப்பாளராக நவமேனன், யாழ். மாவட்ட இணைப்பாளராக கவியரசன், கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளராக கருணாகரன், முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளராக ஆதவன், மன்னார் மாவட்ட இணைப்பாளராக ஜீவா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.12.2022 இல் வெளியிடப்பெற்றது.